இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 237 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – பங்குனி 24 – திங்கள்கிழமை 07 ஏப்ரல் 2025 – சென்னை 28 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 237 : Thiruvalluvar Year - 2056 - Panguni 24 - Monday 07 April 2025 - Chennai 28 Pages ₹ 5.00






முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.4.2025) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் 143.69 கோடி ரூபாய் செலவில் 700 படுக்கை வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் செந்தில்குமார், நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு, மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு. ஜெ. சங்குமணி, நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு. எம். கீதாஞ்சலி, இந்து குழுமத்தின் தலைவர் என்.ராம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.4.2025) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் 143.69 கோடி ரூபாய் செலவில் 700 படுக்கை வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை திறந்து வைத்து பார்வையிட்டார்.

## ‘நீட்’ தேர்வில் இருந்து விலக்கு அளித்தால் மட்டுமே பா.ஜ.க.வுடன் கூட்டணி என எடப்பாடி அறிவிப்பாரா?

# மாநில சுயாட்சி - சமூக நீதியை வென்றெடுப்போம்!

## உதகையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் சூளுரை!

## நீலகிரி வளர்ச்சிக்கு நிறைவேற்றப்பட்ட திட்டங்களை பட்டியலிட்டார்!

**சென்னை, ஏப்.7-**

**‘நீட்’ தேர்வில் இருந்து விலக்கு அளித்தால் மட்டுமே பா.ஜ.க.வுடன் கூட்டணி என எடப்பாடி அறிவிப்பாரா? என்றும் மாநில சுயாட்சி - சமூக நீதியை வென்றெடுப்போம்! என்றும் நீலகிரி மாவட்டத்தில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை திறந்து வைத்தும், நலதிட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றுகையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் சூளுரைத்தார்.**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.4.2025) நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், அரசு கலைக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற அரசு விழாவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை வருமாறு:-**

இந்த நீலகிரியின், மலை அழகை ரசிக்கவா? அருவியில் நனையவா? ஆறுகளில் குளிக்கவா? அணைகளைப் பார்க்கவா? பழங்குடி மக்களின் பண்பாட்டை போற்றவா? முதுமலைக்குச் செல்லவா? தேநீரை ருசிக்கவா? தாவரவியல் பூங்காவை பார்க்கவா? இல்லை படகு சவாரி செய்யவா? என்று இப்படி உதகைக்கு வருகின்ற எல்லோருக்குமே ஆர்வமும், ஆசையும் மனதிற்குள்ளே உற்சாகமும் கரைபுரண்டு ஓடும்! அந்தளவுக்கு திரும்பிய பக்கமெல்லாம் இயற்கை எழில் கொஞ்சும் ஊர்தான் மலைகளின் அரசியான ஊட்டிக்கு வந்திருப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்!

இந்த எழுச்சிமிகு அரசு விழாவில் பங்கேற்று இருக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

உங்கள் ஊருக்கு விருந்தினராக வந்திருக்கின்ற எனக்கு, உங்களை பார்த்தால் கொஞ்சம் பொறாமையாகதான் இருக்கிறது! கொளுத்தும் கோடை வெப்பத்திற்கு ஒரு இளைப்பாறலாக, நீலகிரி மாவட்டத்தில், இந்த மாபெரும் அரசு விழாவில் கலந்து கொண்டிருக்கிறேன். இந்த விழாவை மிகுந்த எழுச்சியோடு மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கக் கூடிய மாவட்ட பொறுப்பு அமைச்சர் மு.பெ. சாமிநாதன் அவர்களுக்கும், அரசு கொறடா ராமச்சந்திரன் அவர்களுக்கும், தலைவர் கலைஞர் அவர்களால் தகத்தகாய சூரியன் என்று அடையாளம் காணப்பட்டு, இன்றைக்கு இந்தியாவே திரும்பிப் பார்க்கும் அறிவிற் சிறந்த நாடாளுமன்றவாதியாக திகழும் உங்கள் எம்.பி.,

ஆ.ராசா அவர்களுக்கும், மாவட்ட ஆட்சியர் திருமதி. லட்சுமி பவ்யா அவர்களுக்கும், இவர்களுக்கெல்லாம் துணையாக இருந்து கடமையை நிறைவேற்றி இருக்கக்கூடிய அனைவருக்கும் என்னுடைய பாராட்டுக்கள், வாழ்த்துகள்!

> **“இந்த நீலகிரியின், மலை அழகை ரசிக்கவா? அருவியில் நனையவா? ஆறுகளில் குளிக்கவா? அணைகளைப் பார்க்கவா? பழங்குடி மக்களின் பண்பாட்டை போற்றவா? முதுமலைக்குச் செல்லவா? தேநீரை ருசிக்கவா? தாவரவியல் பூங்காவை பார்க்கவா? இல்லை படகு சவாரி செய்யவா? என்று இப்படி உதகைக்கு வருகின்ற எல்லோருக்குமே ஆர்வமும், ஆசையும் மனதிற்குள்ளே உற்சாகமும் கரைபுரண்டு ஓடும்! அந்தளவுக்கு திரும்பிய பக்கமெல்லாம் இயற்கை எழில் கொஞ்சும் ஊர்தான் மலைகளின் அரசியான ஊட்டிக்கு வந்திருப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்!”**

### நீலகிரி மாவட்டத்திற்கு ஏராளமான திட்டங்கள்

“நீலகிரியின் வளர்ச்சிக்கு அடித்தளம், தி.மு.க. ஆட்சி” என்று சொல்கின்ற அளவுக்கு இந்த மாவட்டத்திற்கு ஏராளமான திட்டங்களை ஆட்சியில் இருந்த போதெல்லாம் செய்து கொடுத்திருக்கிறோம்! அந்தச் சாதனைப் பட்டியலில் சிலவற்றை மட்டும் நான் சொல்ல வேண்டும் என்றால்,

- உதகை ஏரி புதுப்பிப்பு!
- சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில் மாளிகை!
- இலவச இளம் படுகர் நலச்சங்கக் கட்டடம்!
- முதுமலை சரணாலயம் விரிவாக்கம்!
- இலங்கையில் இருந்து திரும்பிய தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களை கூடலூர், பந்தலூர், கோத்தகிரி வட்டங்களில் குடியமர்த்தி, அவர்களுக்கு வாழ்வாதாரத்தை ஏற்படுத்த தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் உருவாக்கியது.
- தேயிலை தோட்டக் கழகத்தை உருவாக்கியது மட்டுமல்ல, தேயிலை விவசாயிகளுக்கு மானியம்!
- தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு 1996ஆம் ஆண்டு முதல் 20 விழுக்காடு தீபாவளி போனஸ்!
- பழங்குடி மக்கள் வாழும் அனைத்துப் பகுதிகளுக்கும் “மின் இணைப்பு” மற்றும் கலர் டி.வி!
- கூடலூர் பகுதியில் சுமார் 10 ஆயிரம் வீடுகளுக்கு “மின் இணைப்பு”.

இப்படி நீண்ட பட்டியலே போடலாம். இது மட்டுமல்ல,

- நான் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது, உதகைக்கு மூன்றாவது குடிநீர்த் திட்டத்தைக் கொண்டு வந்தேன்.
- அதேபோல, உள்ளாட்சி கடை வியாபாரிகளுக்கு ‘கடை உரிமை’ நீட்டித்து, பெயர் மாற்றம் செய்து கொள்ள அனுமதி கொடுத்தேன்!

உங்கள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா இருக்கிறாரே, முதலமைச்சரான தலைவர் கலைஞரும் துணை முதலமைச்சராக நானும், ஏன் இப்போது முதலமைச்சராக இருக்கும் போதும் அடிக்கடி சந்திக்கின்றபோதெல்லாம் நீலகிரி தொகுதிக்குத் தேவையான பல திட்டங்களைக் கேட்டு வாங்கிவிடுவார். ஒன்றிய அமைச்சராகவும் இருந்தவர். அந்த வகையிலேயும் இந்த தொகுதிக்கு ஏராளமான பணிகளை அவர் செய்து கொடுத்திருக்கிறார்.

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

# நீலகிரி மாவட்டத்திற்கு 6 புதிய அறிவிப்புகள்!

ஊட்டிக்கு யார் வந்தாலும், உடலும், மனமும் குளிர்ந்துதான் திரும்பிப் போவார்கள்! அப்படிப்பட்ட உங்கள் மாவட்டத்திற்கு வந்திருக்கின்ற நான் உங்களை குளிர்விக்கின்றது போல 6 புதிய அறிவிப்புகளை இப்போது வெளியிடப் போகிறேன். இல்லையென்றால், திரு. ராசா விட மாட்டார். நீங்களும் விடமாட்டீர்கள்.

## உதகையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு !

**முதல் அறிவிப்பு**

**நீலகிரி மாவட்டத்தில், சொந்தமாக வீடு இல்லாத ஏழை, எளிய மக்களுக்காக கூடலூரில் 26 கோடியே 6 லட்சம் ரூபாய் செலவில் 300 வீடுகள் கொண்ட புதிய கலைஞர் நகர் அமைக்கப்படும்!**

**இரண்டாவது அறிவிப்பு**

**பழங்குடி மக்கள் நிறைந்து வாழுகின்ற உங்கள் மாவட்டத்தில், அவர்கள் வாழ்வியலை எல்லோரும் தெரிந்து கொள்கின்ற வகையில் காட்சிப்படுத்தவும், அதுபற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும், 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் “பழங்குடியினர் அருங்காட்சியகம் மற்றும் ஆராய்ச்சி மையம்” அமைக்கப்படும்!**

**மூன்றாவது அறிவிப்பு**

**நீலகிரி மாவட்டம் முழுக்க இருக்கின்ற இயற்கை அழகை சுற்றுலாப் பயணிகள் கண்டு களிக்கின்ற வகையில், “எங்கும் ஏறலாம் - எங்கும் இறங்கலாம்” எனும் ‘ஹாப் ஆன் - ஹாப் ஹாஃப்’ சுற்றுலா முறை, 5 கோடி ரூபாய் செலவில், 10 புதிய பேருந்துகளுடன் தொடங்கப்படும்!**

**மிக முக்கியமான நான்காவது அறிவிப்பு**

**ஊட்டியில் சுற்றுலா காலங்களில் ஏற்படக் கூடிய போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கு, 20 கோடி ரூபாய் செலவில் ‘மல்ட்டி லெவல் கார் பார்க்கிங்’ வசதி அமைக்கப்படும்!**

**ஐந்தாவது அறிவிப்பு**

**நடுகாணி “மரபணுத் தொகுதி சூழலியல் இயற்கைச் சுற்றுலா மையம்”**

**3 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்!**

**ஆறாவது அறிவிப்பு**

**பழங்குடியின மக்கள் வாழும் பகுதிகளில், 5 கோடியே 75 லட்சம் ரூபாய் செலவில், 23 சமுதாயக் கூடங்களும், நகர்ப்புறப் பகுதிகளில் வாழுகின்ற பழங்குடியினருக்கு, 10 கோடி ரூபாய் செலவில் 200 வீடுகளும் கட்டித் தரப்படும்!**

- முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை

(நீலகிரி மாவட்டத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா)